விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 1 ரபிஉல் 14 இதழ் 279

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-11 1986

## நோயாளிகள் வெளியேற்றம்:

# யாழ். ஆஸ்பத்திரிவார்ட்டுகள் வெறிச்சோடுகின்றன

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டு களிலிருந்து பாதுகாப்புக் கருதி கடுமையான நோயாளிகளைத் தவிர மற்றும் நோயாளிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி யுள்ளனர்.

மேல் மாடி வார்ட்டுகளில் உள்ள கடுமையான நோயாளி களும் கீழ்ப்பகுதி வார்ட்டு களுக்கு இடம் மாறியுள்ளனர்.

நேற்றுமட்டும் சுமார் எழு பது நோயாளிகள் வார்ட்டு களிலிருந்து வெளியேறியுள்ள னர்.

வழக்கமாகத் தினமும் ஆஸ் பத்திரி வார்ட்டுகளுக்கு 125 பேர் சராசரி அனுமதிக்கப்படு வார்கள். ஆனல் நேற்று 65 நோயாளிகள் மட்டுமே அனு மதிக்கப்பட்டனர். வார்ட்டில் தங்குவதற்குவந்த சில நோயா ளர்கள்கூட உடன் திரும்பிச் சென்றுவிட்டனர்.

அநேகமான மேல்மாடி வார் ட்டுகளில் கட்டில்கள் காலி யாகவுள்ளன.

6ம் வார்ட் வெறிச்சோடிக் காணப்பட்டது. அங்குள்ள 32

[5ம் பக்கம் பார்க்க]

## ● 'சார்க்' மாநாட்டுக்குள் ஒரு துணைமாநாடு:

# பெங்களூரில் இலங்கைபிரச்னை

# பேச்சுக்கள் தீவிரம்

## முக்கியஸ்தர்கள் 'இரவு பகல்' முயற்சி

(நமது சிறப்பு நிருபர்)

**பெங்களூரில் நேற்று ஆரம்பமான இரண்டாவது 'சார்க்' உச்சி மாநாட் டுக்கு மத்தியில் ஒரு துணைமாநாடாக இலங்கை இனப்பிரச்னை குறித்த பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. பல இந்திய- இலங்கை முக்கியஸ்தர்கள் உணவு, உண்டியையும் ஒதுக்கி இரவு பகலாக நீண்டநேரம் இப்பேச்சுக்களில் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

நேற்றுமுன்தினம் பெங் களூர் விமான நிலையத்தில் இலங்கை ஜனதிபதிக்கும், இந்தியப்பிரதமருக்குமிடையே ஆரம்பித்த இலங்கை இனப் பிரச்னை குறித்த பேச்சுக்கள் நேற்று இரண்டாவது நாளாக அவர்களது உதவியாளர்கள் ஊடாக இடம் பெற்றது.

திரு. ராஜீவ்காந்தி இலங்கை அதிபர் ஜயவர்த்த னவை அவர் தங்கியிருந்த ஹோட்டலில் சென்று சந்தித் தும் பேச்சுக்களை நடத்தினர்.

இலங்கை வெளிவகார அமைச்சர் ஏ. ஸி எஸ். ஹமீத் நேற்று தமது மதிய போசனத்தையும் துறந்து இந்திய வெளிவிவகார அமைச் சர் திரு. என் டி. திவாரி யுடன் இலங்கை பிரச்னை குறித்து விவாதித்தார். இவர் களுடன் இவர்களது உதவி யாளர்களும் பங்கேற்றனர்.

இதே வேளை இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் புள்ளி யியல் அமைப்படங்கிய வரை படங்கள் இந்தியப் பிரதமர் ராஜீவிடம் இலங்கை ஜனதி பதியினல் கையளிக்கப்பட் டுள்ளன.

81ம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீடும் கணிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட இவ் வரை படங்களின்படி திருமலையில் 86,000 தமிழரும் 98 000 சிங்

(5 ம் பக்கம் பார்க்க)

## சார்க் விவகாரம்:

# ஜே. ஆருக்கு கறுப்புக்கொடி நெடுமாறன் கைது!

பெங்களூர், நவ. 16

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் நேற்று பெங்களூரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பெங்களூரில் நேற்று ஆரம்பமான 'சார்க்' மாநாட் டில் கலந்து கொள்வதற்காக பெங்களூரில் வந்திருந்த ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கு கறுப்புக் கொடிகாட்டி ஆர்ப்பாட்டம செய்தபோதே திரு நெடுமாறன் கைது செய்யப்பட்டார்

நெடுமாறனுடன் சேர்த்து கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்த மற்றும் 48 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் [வா]

## ஜே. ஆருக்கு புறம்பான வாசல்

பெங்களூர், நவ. 16.

பெங்களூரில் நேற்று 'சார்க்' மாநாடு ஆரம்பமான போது ஜனதிபதி ஜெயவர்த்தன பாதுகாப்பு காரணங் களுக்காக மாநாட்டு வாசல் அல்லாத வேறுஒரு புறம் பான வாசலால் மாநாட்டு மண்டபத்திற்கு சென்றார்.

இதேவேளை மாநாட்டு மண்டபத்திற்குள்ளேயும் பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட் டிருந்தனர்.

## பெங்களூரில் எம்.ஜி ஆர்.

பெங்களூர், நவ 16

தமிழக முதலமைச்சர் எம் ஜி ராமச்சந்திரன், மத்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு நட்வர் சிங்கையும், மத்திய நிர்வாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் திரு ப. சிதம்பரத்தையும் இன்று பெங்க ளூரில் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்னை பற்றி பேச்சு நடத்தினர்

சுமார் ஒரு மணி நேரமாக இப்பேச்சுக்களின் போது, இலங்கையின் இனப்பிரச்னை குறித்து தமிழ்ப் போராளிகளின் நிலையை தமிழக முதலமைச்சர் எடுத் துக் கூறியதாக தெரியவருகிறது. முதலமைச்சருடன் தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச் சந்திரனும் உடனிருந்தார்

இலங்கையின் இனப்பிரச்னைபற்றி பெங்களூரில் நடைபெறவுள்ள இந்திய தலைவர்களின் உயர்மட்டப் பேச்சுக்களின்போது ஆலோசனை கூற தமிழக முதல் வர் உடனடியாக பெங்களூர் அழைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (ஊ)

## விபரீதம் எங்கும் நடக்கலாம்:

# அடையாளக்குறிப்புகளை உடன் வைத்திருக்கவும்!

## அவசர மருத்துவசேவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங் மக்கள் வெளியே நடமாடும் போது தம்மை அடையாளப் படுத்தும் வகையில் அடை யாள அட்டைகளையோ அல் லது அவர்களது பெயர், விலா சம் அடங்கிய குறிப்பையோ வைத்திருக்குமாறு அவசர மரு த்துவ சேவையினர் ஈழமக்க ளுக்கு அவசர வேண்டுகோள்

[ ம் பக்கம் பார்க்க]

## விற்பனையாகின்றது!

நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

★ மொத்தமாகவும்

★ சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

(விஷேட கழிவு வழங்கப்படும்).

இன்றே நாடுங்கள்.

## அரஸ் ஜவுளியகம்,

146, நவீனசந்தை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24001

[C 5837]

## களவுபோன 17 சைக்கிள்கள் புலிகளினல் மீட்பு

யாழ்ப்பாணம், திங் களவாடப்பட்ட 17 சைக் கிள் வண்டிகள் தமிழீழ விடு தலைப்புலிகளினல் மீட்கப்பட் டுள்ளன மீட்கப்பட்ட 17 சைக் கிள்களுக்கும் 2 பெண்களுக்

(5 ம் பக்கம் பார்க்க)

## அனுமதிப்பத்திர கடைசித் திகதி டிசம்பர் 31

யாழ்ப்பாணம், திங்கள் வானெலி, ரி வி, டெக் ஆகியவைகளின் அனுமதிப்பத் திரங்களுக்கான கடைசித் திகதி டிசம்பர் 31ம் திகதியாகு மென்றும், இதுவிடயத்தில் சகல பொதுமக்களையும் தம்

(5 ம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளத்தில்

# பவல் ஆமட் கார் கண்ணிவெடியில் தகர்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள் தள்ளாடி ராணுவ முகா மிலிருந்து நேற்றுக்காலை கவச வாகனங்கள் சகிதம் புறப் பட்ட ராணுவத்தினர் மீது உயிலங்குளத்தில் தமிழீழவிடுதலை புலிகள் கண்ணிவெடித்தாக்கு தல் நடத்தியதில் ஒரு 'பவல்' ஆமட்கார் முற்றாக சேத

[5ம் பக்கம் பார்க்க]

## வடமராட்சியில்

# உணவு நிலையங்கள்மீது திடீர் பரிசோதனை

பருத்தித்துறை, ஞாயிறு பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் உள்ள ஹோட்டல்கள் தேனீர்கடைகள், உணவு விடுதிகள், இறைச்சிக்கடை என்பன தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மருத்துவக்குழு வினல் திடீர் பரிசோதனைக ளுக்குள்ளானது இப்பரிசோ தனையின் போது சுகாதாரச் சீர்கேட்டுடன் செயற்பட்டு

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Honda-C 90 (in good condition) உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 15, இராசாவின் தோட்டம், (Near Railway crossing), யாழ்ப்பாணம்.
C 5802

நல்ல நிலையிலுள்ள L E C Deep Freezer, கடை சோகேஸ் விற்பனைக்குண்டு (இறைச்சிக் கடைக்கு அருகாமையில்). திருமதி யோ. நடராசா, பொற்பதிரோட், கோண்டாவில்.
C 5805

தரமான அரிசி, மாட்டுத்தீன், கோழித்தீன், முட்டை ஆகியவற்றை இங்கே பெற்றுக் கொள்ளுங்கள். யாழ். அரிசிக் களஞ்சியம், ஸ்ரான்லி வீதி (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம்.
(C 5781)

சுத்தமாக தயாரிக்கப்பட்ட குரக்கன் மா மொத்தமாகவும். சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G.M. 777 K K S. Road and 208 1 st Cross St. Jaffna T. P. 22611.
(C 5071)

பழைய ஓடுகள், பனை மரங்கள், தீராந்திகள், நிலைகள், யன்னல்கள் கதவுகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு M. சபாரத்தினம், (கொக்குவில் சந்திக்கு காங்கேசன்துறை வீதி அருகாமையில்) கொக்குவில்
(C 5824)

புதிய Pioneer Audio Deck செற் கபினற்றுடனும் இரண்டு பெரிய 2 Way Pioneer Box உடனும் விற்பனைக்குண்டு. (2 Pieces- 90w) விலை 7500/- விபரங்களுக்கு:- மு. சிறிகாந்தா, மே/பா. V. C. சண்முகம், கந்தரோடை, உடுவில் வீதி, உடுவில். (கற்பக்குளை பிள்ளையார் கோவில் அருகாமை)
(C-5825)

Show case, Bread Slicer. Coffee Perculator, கண்ணாடி மேசைகள், விருந்தைக் கதிரைகள், Singer தையல் மெஷின், கட்டில் மெத்தைகள், எழுது மேசைகள், Electric organ, கசற் றேடியோ, கிளாஸ் வகைகள், Dinner sets, Baby Pram, மற்றும் பல உடன் விற்பனைக்கு M தியாகராஜன், 326, Main Street (near St Charles School) Jaffna. [C5759]

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, Floor Polisher, National Electric Boiler, Fans, English Stainless Steelபாத்திரங்கள், சாப்பாட்டு மேசைகள், அலுமாரி, Steel அலுமாரி. Kenwood Mixer, Steel Bath Tub, ஹோல் செற், Baby Belling Cooker with Oven, கசற் றேடியோக்கள், M தியாகராஜன், 326, Main Street, சென். சாள்ஸ் பாடசாலை அருகில், Jaffna
[C 5760]

50 இரும்புக் கதிரைகள், டிரான்சிஸ்டர் மைக்காபோன் ஒலிபெருக்கி - மேசைகள், வாங்குகள் - சுவர்க்கடிகாரங்கள் - மேசைக் கடிகாரங்கள் - கைக்கடிகாரங்கள் - மயிர் உலர்த்திகள் / சுறுட்டிகள், ரோஸ்டர் - ஒவன், பேப்பர் வெட்டும் மெசின் - மேடைத் தராசு - கவுண்டர் மேசை - விருக்கிகள். Water Filter- ஸ்ரேறபிலைஸர் - மினிபஸ் றிம்கள் - மாட்டுத் தொழுவம் - வைக்கோல் - போத்தல்கள் இன்னும் பல. லக்கிபெனிபிட் கோ லிமிட்டட் சந்திக் கருகாமையில், கோப்பாய்.
(C 5822)

## விற்பனைக்கு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியில் மோட்டார் லயிற் சகல வசதியுடன் கூடிய வீடு மூன்று பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும், மு/வரி சி. வன்னியசிங்கம், இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு
(C 5820)

Golden Comet சேவற் குஞ்சுகள் 19ந் திகதி புதன் கிழமையும், Bairaha Farms புறோயிலர் குஞ்சுகள் 21ந் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியேபதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ், பிரப்படி கொக்குவில்.
(C 5828)

## தேவை

அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்வதற்கு ஆண், பெண் இருபாலரும் தேவை. நற்சான்றுபத்திரத்துடன் நேரில் வரவும். வீனஸ் 266/1 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
C-5800

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரம் [Typewriters] புதியது, பழையதும் உடன் தேவை. Fudo Enterprises, 39/17 Power House Road, 3-Rd Lane, Jaffna. [C5780]

எமது தையல் நிலையத்திற்கு சிறந்த தையல் பெண்கள் தேவை. பண்டத்தரிப்பு சுற்றுடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் 23 - 11 - 86 அன்று 10மணிக்கு நேரில் சமுகம் தரவும். ரஞ்சினி ரெயிலேஸ் (மேல் மாடி) பண்டத்தரிப்பு சந்தி (A. S N. கட்டிடம்) பண்டத்தரிப்பு.
(C 5826)

## சேவை

உங்களுக்குத் தேவையான பொருட்கள் எவையாலும் வாங்கவும் / விற்கவும் தினசரி எம்மிடம் வாருங்கள். லக்கி பெனிபிட் கோ. லிமிட்டட் சந்திக்கருகாமையில், கோப்பாய்.
(C 5823)

கைரேகை, கிரகநிலை, எண் சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும். மணமகன் மணமகள் தேவையானவர்கள் செவ்வாய்க் குற்ற முள்ள சாதகர்களும்) சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம் பிரபல கைரேகை எண்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீதி, நல்லூர், கைலாசபிள்ளையார் கோவிலடி.
C 5772

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்

## அறிவித்தல்

எமது தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கால்நடை உணவுகளை விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் உணவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு போதிய இடவசதியை ஏற்படுத்தல்வேண்டும். ஒரு தொன்னுக்கு மேலாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு 5% விற்பனைக் கழிவு வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட முகவர்களுக்கு போக்குவரத்து விநியோகம் இலவசம். விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு 26-11-86ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(A-3107)

SRI LANKA NATIONAL SALT CORPORATION.

## TENDER for Construction of Under Ground Water Tank

Sealed tenders are invited for construction of 10 000 gallons capacity under ground water tank at Kurinchativu Saltern.

Tender froms will be issued only to those who can produce evidence for their ability to undertake such work.

Documents for tenders will be issued on payment of a refundable fee of Rs 1500/- and a non-refundable fee of Rs 100/-.

Tender forms and further particulars could be obtained from the Deputy General Manager (Technical). Head office, Colombo or Regional Manager (Northern Region), Elephant Pass.

Tenders should be addressed to Deputy General Manager (Technical) and marked "Tender for Under Ground Tank Elephant Pass" on top hand corner.

Tenders close on 1-st December 1986 at 3-00 p m. at Deputy General Manager (Technical)'s Office, Colombo.

Regional Manager,
Northern Region.

Sri Lanka National
Salt Corporation,
110, Sir James
Peiris Mawatha,
P O Box No. 1334;
Colombo-2. (A-3109)

## Sales Representative

யாழ்: குடாநாட்டினுள் தினமும் பாவனையிலுள்ள பொருட்கள் விற்பதற்கு அனுபவம் வாய்ந்த முயற்சியுடைய விற்பனைப் பிரதிநிதி தேவை.

மாதச் சம்பளமும் விற்பனையில் கொமிஷனும் வழங்கப்படும்.

இரு நற்சான்று பத்திரங்களுடன் முன்னைய அனுபவம் பற்றிய விபரங்களையும் குறிப்பிட்டு இரு நடுவர்களின் பெயர்களுடன் 30-11-86க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

C/o ஈழநாடு, விளம்பர இலக்கம்: A-2880,
யாழ்ப்பாணம்.

(A-2880)

## எமது நேற்றைய வெளியீடுகள்

1. தர்மதேவதை (L. P.)
2. லட்சுமி வந்தாச்சு (L. P)
3. புன்னகை மன்னன் (L P)
4. கண்ணுக்கு மை எழுது (L. P.)
5. மாவீரன் (L P)
6. மேல் மருவத்தூர் அற்புதங்கள் [பக்தி] (L. P.)
7. சீர்காழி [பக்தி] (L P)
8 சுசிலா [பக்தி] (L P)

(இசைத் தட்டுகள்)

## அம்பாள் வீடியோ சென்ரர்,

நாச்சிமார் கோவிலடி,
89ச, கே. கே. எஸ். வீதி.

[C-5840]

சாவகச்சேரி நகராட்சிமன்றம்

## அமைப்பு வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் அமைப்பு வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விபரம் | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் | ஒப்பந்தகாரரின பதிவுத் தொகை |
| --- | --- | --- | --- |
| ………… | ……………… | …………… | ………… |
| சாவகச்சேரி பொதுநூலகம் விஸ்தரிப்புக்கான அமைப்பு | 1000/- | 200/- | 3,00,000/- |

சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை மேற்காட்டப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் படிவத்திலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இவ்வேலை சம்பந்தமான மேலதிக விபரங்களை நகராட்சிமன்ற வேலை அத்தியட்சகரிடம் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.

(A 3108)

யாழ் நகரில் ஓர் புதிய உதயம்
எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதி வேண்டும் - - - -

## அமைதியிழந்து தவிக்கின்றீர்களா?

★ குடும்பச்சிக்கல்கள்
★ இளைஞர் பிரச்சினைகள்
★ தற்கொலை நாட்டம்
★ பாலியற் பிரச்சினைகள்
★ மதுஅடிமை நிலை
★ புகைத்தல் பழக்கம்
★ போதைவஸ்து அடிமைநிலை

இவற்றிலிருந்து மீட்சிபெற அறிவுபூர்வமான, ஆலோசனைகள் பரிவுடனும் அந்தரங்கமாயும் வழங்கப்படுகின்றன.

**ஆலோசனையாளர் குழு:**

★ டாக்டர் க. சுகுமார் M.B.B S. [Cey]
★ அருட்திரு. எஸ், டேமியன் M.A (Hon) Coun. Psy (Ottawa)
★ அருட்திரு. எஸ். கே. கதிர்காமர் Dip in Coun. Psy (Vellore)
★ டாக்டர் செல்வி மாலதி சிதம்பரநாதன் M.B.B.S. [Cey]

**ஆலோசனை நேரம்:**

ஞாயிறு மாலை — 2.30 - 5 30
வியாழன் மாலை — 2 30 - 5 30
மற்றைய நாட்களில் பதிவு செய்தல் மட்டும் 8.30 முதல் 5.30 வரை

## உளவள ஆலோசனை நிலையம்

19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[வெள்ளி விடுமுறை தினம்]

A Creation of Joe Egerton's Zenith Ads. [A3111]

# இந்திய நடவடிக்கையால் தமிழர் வி. கூட்டணி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது

சென்னை, நவ. 16

சென்னையில் கடந்தவாரம் தமிழ்ப்போராளிகள் மீது இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளகசப்புஉணர்வுகளை நல்லமுறையில் போக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழர்விடுதலைக்கூட்டணி இந்திய மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் அரசியல்தலைவர்களையும் கேட்டுள்ளது.

த. வி. கூட்டணியின் பொலிட்பீரோ சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றின் மூலமே இவ்வாறான வேண்டுகோள் ஒன்றை விடுத்தது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: தமிழ்விடுதலைப் போராளிகள் மீது இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகுறித்து த.வி கூட்டணி ஆழ்ந்தகவலை கொண்டுள்ளதென்றும் இலங்கையில் நீண்டகாலமாக அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களின் மிகநெருங்கிய நண்பர்களாகவும், பாதுகாவலர்களாகவும் இந்திய அரசையும், இந்திய மக்களையும் த.வி கூட்டணியும், விடுதலைஅமைப்புக்களும் எப்போதும்மதித்து வருகின்றது

ஒருசில தமிழர் அமைப்புக்களைச் சேர்ந்த சிலதனிப்பட்டவர்களால் நிகழ்ந்த ஓரிரண்டு தவறான சம்பவங்களைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ் விடுதலைப் போராளிகளுக்கு இந்தியாவிலிருந்துவரும் அனுதாபத்தைக் கெடுக்க இலங்கை ஏஜென்டுகள் சிலர் திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்.

தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையே பிளவை ஏற்படுத்த இந்த ஏஜென்டுகள் முயல்கின்றன என்றும், தமிழ்நாட்டில் நிகழ்ந்த துரதிஷ்டவசமான சம்ப

(7-ம் பக்கம் பார்க்க)

## ஈரானுக்கு ஆயுத விநியோகம் றேகன் அறிவிப்பிற்கு அரபு நாடுகள் கண்டனம்

லண்டன், நவ: 16

ஈரானுக்கு ரகசியமாக இராணுவ தளபாடங்களை விநியோகித்தாக அமெரிக்கஅதிபர் றேகன் அறிவித்துள்ளதை அரபு நாடுகள் கண்டித்துள்ளன

ஈரானுக்கு இராணுவ தளபாடங்கள் விநியோகித்தமைக்காக றேகன் நிர்வாகத்தை ஈராக் அரசு அறிக்கையொன்றின் மூலம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஈரானுக்கு இரகசியமாக ஆயுதங்களை விநியோகிக்கதான் முன்வந்துள்ளதாக ஜனாதிபதி றேகன் ஒப்புக்கொண்ட உடனேயே சிரியா பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாகக்கூறி அதற்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதிப்பதாக அறிவித்திருப்பது குறித்து சிரியாவும், லிபியாவும் கடுமையானஎதிர்பபைத் தெரிவித்துள்ளன.

இந்நடவடிக்கைகாரணமாக அப்பகுதியில் அமெரிக்கா மதிப்பை இழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

87 A/L
DAY CLASS

பிரிவு III ஆரம்பமாகி விட்டது

PURE / APPLIED } MATHS—10-30 To 12-30
ZOOLOGY — 1-30 — 2-30
BOTANY — 2-30—3 30
PHYSICS — 3-30—4-30
CHEMISTRY—4-30—5-30

(எமது வழமையான ஆசிரியர் குழுவால் கற்பிக்கப் படுகிறது

New Master Institute,
B. M. C. LANE, JAFFNA. (A 2868)

விவசாயிகளே!

உங்கள் வயல்களில் நெல்லுடன் போட்டியிட்டு வளரும்

கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவாற்புல், ஆடிப்புல், பன்கோரை வகைகளை

சேர்கோப்பூர் 36% — 450 மி. லீ. ரூ. 68/- 3. லீ. ரூ. 410/-
(புரொபனில் — 3, 4 டீ. பி. ஏ.)

பாவித்து சிறப்பாக கட்டுப்படுத்தி கூடிய விளைச்சலை உறுதி செய்துகொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER
ஹேகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10

இது ஒரு ஜேர்மன் மேற்கு தயாரிப்பு (A 3023)

லங்கெம் M 50 களைகொல்லி

விவசாயப் பெருமக்களே!

உங்கள் நெல் வயல்களில் காணப்படும் அகன்ற இலைக் களைகளை முற்றாக அழிக்க லங்கெம் M 50ஐ பாவியுங்கள்.

நீண்டகாலமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா விவசாயிகள் பாவித்து பயன் அடைந்த ஒரே களைகொல்லி லங்கெம் M 50.

400 M L. 38-00
4 Litre 325-00

லங்கெம்
விவசாயிகளின் தோழன்

விபரங்களுக்கு:
லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்,
219, 221, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23454

HEAD OFFICE:
Lankem Ceylon Ltd.,
760, BASELINE ROAD, COLOMBO—9
Telephone:- 598292 — 6

LANKEM
Lankem M-50
MCPA
Active ingredient: Potassium salt of MCPA
400 g/litre

වල් නාශකය
களை நாசினி
Weedicide
විෂ
நஞ்சு
POISON

**மணிவாக்கு**

வெற்றி என்பது உறவைக் குறிக்கும்; எவ்வளவுக்கு வெற்றி பெறுகின்றுயோ அவ்வளவுக்கு உறவினரும் கூடிவிடுவார்கள்.

— வாரன் ஹல்

# நமது நோக்கு

## இனப்பிரச்னைக்கு இந்தியாவின் புதிய திட்டம்?

தென் ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு (சார்க்) மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன பெங்களூர் புறப்பட்ட அதே வேளையில் தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளிகள் மீது பொலிசார் விதித்திருந்த வீட்டுக் காவல் நடவடிக்கையும் கைவிடப்பட்டுள்ளது.

இது, தமிழ்ப்போராளிகள் மீதான நடவடிக்கையானது முழுக்க முழுக்க உள்நாட்டு விவகாரம், இலங்கை ஜனாதிபதியின் பெங்களூர் விஜயத்துக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பதைக் காட்டுவதாக இருக்கலாம். அவ்வாறயின் போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள ஆயுதங்கள் யாவும் திருப்பி ஒப்படைக்கப்படும் என்றே எதிர்பார்க்கவேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளிகள் மீது பொலிசார் திடீர் நடவடிக்கை எடுத்த செய்தி கிடைத்த கையோடு இங்கு வடபகுதியில் இலங்கை ராணுவத்தினர் திடீர் தாக்குதல்களை நடத்தியுள்ளதும் வல்லை வெளியில் 'மினி' முகாம் ஒன்றை அமைக்க முற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. போராளிகளின் எதிர் நடவடிக்கைகள் ஈடுகொடுத்தமையால் இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

என்ருலும் "வடக்கில் ஆயுதப்படையினர் நடத்தியுள்ள தாக்குதல்கள் போராளிகளுக்கு பலலட்சம் பெறுமதியான நட்டத்தை ஏற்படுத்தியிருப்ப"தாக பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி மகிழ்ச்சி கொண்டிருக்கிருர்.

"அந்த செயற்பாடு இப்போது முற்றுப்பெற்றுவிட்டது இது பிரிவினைவாதிகளை பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள உதவும்" என்று அவர் மார்பு தட்டுகிருர்.

உண்மையில், கிராமங்களில் இராணுவம் புகுந்தால் என்ன நடக்கும் என்பது இப்பகுதி மக்களுக்கே புரியும். அதுபற்றி அமைச்சர் அத்துலத் முதலி கவலைப் படமாட்டார். கவலைப்படும் இளைஞர்களின் கைகளைக் கட்டிப்போடுவது போல் இந்திய அரசு நடந்து கொள்வது சரியாகுமா?

பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கான சுமுக சூழ்நிலையொன்று உருவாகுமானுல் அது வேறு விடயம், அப்படியான சூழ்நிலையை இராணுவத் தாக்குதலின் மூலமே ஏற்படுத்திவிட்டதாக திரு. அத்துலத் முதலி கூறிக் கொள்வாரானுல், அது பொருந்தாது.

கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலமாக தமிழ் மக்களை அடித்து அடித்தே அடிமைகளாக வைத்திருக்க முயன்றுவந்துள்ள பேரினவாதிகள் இன்றும் அதே போக்கினை வேறுவிதமாகக் கையாள முற்படின், அதனுல் புதிய திருப்பங்கள் உருவாகுமேயன்றி நீதிக்காகப் போராடும் மக்களின் உணர்ச்சிகள் மழுங்கிவிடுவதில்லை. எனவே அமைச்சர் வழமையான தமது வீராப்பு விசாரங்களைக் கைவிட வேண்டிய காலம் உருவாகியுள்ளதை உணரவேண்டும்.

மேலும் "பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறவேண்டுமானுல் வன்செயல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்" என 'சார்க்' மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ள இலங்கைவெளிநாட்டு மந்திரியிடம் இந்தியா இடித்துரைத்திருப்பதை மறைத்துவிட முடியுமா?

இனப்பிரச்னைத் தீர்வுக்கென இலங்கை அரசு முன்வைத்த யோசனைகள் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளைக்கூடப் பூர்த்தி செய்யவில்லையென்ற நிலையில் தமிழர் குழுக்கள் தமது தரப்பில் தனித்தனியே புதிய யோசனைகளை இந்திய அரசிடம் ஒப்படைத்துள்ளமை தெரிந்ததே. இந்த இருதரப்பு யோசனைகளையும் ஆராய்ந்து இந்திய மத்திய அரசின் நிபுணர்கள் தயாரித்துள்ள புதிய திட்டமொன்றை பிரதமர் ரஜீவ் காந்தி ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் கையளித்திருப்பதாகவும் அதன் மீதே இரு தலைவர்களும் பெரும்பாலும் ஆலோசனைகள் நடத்தியதாகவும் பெங்களூரில் இருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவின் இப்புதிய திட்டம் போராளிகள் குழுக்களுக்குப் பெரும்பாலும் ஏற்புடையதாய் இருக்கும் என இந்திய அதிகாரிகள் கருத்து வெளியிடும் அதே வேளை "வடக்கு கிழக்கு இணைப்புக்கே இடமில்லை" என திரு அத்துலத்முதலி தென்னிலங்கை மேடைகளில் அந்தப் பழைய பல்லவியைப்பாட ஆரம்பித்திருப்பதும் அரசாங்க சார்பு தொடர்பு சாதனங்கள் அதற்கு அனுபல்லவி பாடிவருவதும் எதனைக் காட்டுகின்றது?

### உணவு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

வடமராட்சியில் மூன்று தினங்களாக நடந்த பொம்பர் ஹெலி, ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறிய குடும்பங்கள் அயல் கிராமங்களில் தங்கியுள்ளன.

இவர்கள் நிலைமை பற்றி பிரஜைகள் இணைப்புக் குழுவினர் நேற்று யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் தெரிவித்தனர்.

வீடுகள் சேதமடைந்த பலர் உடமைகள் யாவற்றையும் இழந்து அகதிகளாக வேறு இடங்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு உடை உணவு வழங்குவதற்கான ஏற்பாட்டினை பொது ஸ்தாபனங்கள் செய்துள்ளன. (இ)

# இந்த நாட்டின் ஓர் இதயம் யாழ். பெரியாஸ்பத்திரியில் இருக்கிறது

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

**2-11-86** அன்று மீண்டும் யாழ். ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தேன்! மூன்று நாட்களுக்கு முன்பு அடித்த ஷெல்லால் யாழ். ஆஸ்பத்திரியே அழுது கொண்டிருந்தது. ஆஸ்பத்திரியில் வேலை செய்த ஊழியர்களே படுகாயம் அடைந்துள்ளனர். இதற்குமேல் நோயாளிகளின் மனநிலையையும், ஊழியர்களின் மனநிலையையும் சொல்லத் தேவையில்லை.

உனது காதுகள் கேட்கத் தொடங்கினுல் உனது கண்கள் பார்க்கத் தொடங்கும் என ஒரு ஆங்கிலக் கவிதை உண்டு. அரசாங்கமோ ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் ஆட்சேபனைகளைக் கேட்கத் தயங்குகின்றது; கண்களை மூடிக்கொண்டுள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது பயங்கரவாதிகள் ஆஸ்பத்திரிக்குள் இருந்து தாக்கியதாக ஏதோ சொல்லியும் தொலைக்கின்றது!

#### 25ம் வார்ட்டின் அவலங்கள்

யாழ். பெரியாஸ்பத்திரியில் ஷெல் அடியால் துன்பப்படும் மக்களின் அவல ஓலங்களைக் கேட்க வேண்டுமாயின் 25ம் வார்ட்டிற்குப் போகவேண்டும் யாழ் குடாநாட்டில் சுவர் எல்லாம் கண்ணீர் அஞ்சலிகள், 5ம் வார்ட்டில் கட்டில்கள் தோறும் கண்ணீர்க்கதைகள்.

"ஷெல்" அடிபட்டு வயிற்றிலும் காலிலும் காயப்பட்டுக் கிடக்கும் ஒரு கச்சேரியடி வாசியைச் சந்தித்தேன். அவர் திருகோணமலைச் சிறைச்சாலையில் வேலை செய்கின்ருர். யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தடியில் வந்த போது அவர் மீது ஷெல் விழுந்தது. நடக்க முடியாத நிலையில் அவர் படும் துன்பமோ சொல்லில் வடிக்க முடியாது. அவர் பெயர் சோதிராஜா.

அடுத்த கட்டிலுக்குச் சென்று இன்னெரு நோயாளியைச் சந்தித்தேன் அவர் சொன்ஞர். "எனது தகப்பனுர் 25ம் வார்ட்டிற்குப் பக்கத்தில் உள்ள வார்ட்டில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு நோயுடன் போராடி வருகின்ருர் தேனீர் குடிப்பதற்காக நான் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தேனீர்கடை பக்கம் சென்றேன். கண்மூடி முழிப்பதற்குள் ஷெல் ஒன்று ஆஸ்பத்திரி வாயிலில் வந்து வீழ்ந்தது. அதன் துண்டு கையினைப் பதம்பார்த்தது.

இன்னெரு வாலிபருக்கு அருகில் அவரின் அண்ணன் தாதிபோல் கடமை செய்கின்ருர். தம்பியோ கச்சேரி கிறுகைத்தொழில் திணைக்களத்தில் வேலை செய்கின்ருர். தனது உத்தியோக பைல்களுடன் ஆஸ்பத்திரியருகே வந்தபோது ஷெல் விழுந்தது. இடது காலின் தொடையே சிதறுண்டு கிடக்கின்றது. அழகான அந்த வாலிபன் இன்னும் தன் வாழ்க்கையையே ஆரம்பிக்கவில்லை தீபாவளிக்கு இரண்டு நாள் லீவில் வந்த அண்ணன் தம்பிக்காகத் தனது கடமையைத் தள்ளிப்போட்டிருக்கின்ருர். இப்படி நோயாளிகள் பலவிதம். கவலைகளும் பலவிதம்.

3 - 10 - 86ல் 5ம் வார்ட்டில் நுழைந்து பார்த்தேன். பெரியபனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவர் கையில் காயங்களுடன் அனுமதிக்சப்பட்டிருக்கிருர். நான் ஒரு தேநீர்க்கடையில் வேலை செய்கின்றன் நேற்று நள்ளிரவு அடித்த ஷெல்லால் கடையே உடைந்து விட்டது. தெய்வாதீனமாக உயிர் தப்பினேம். என்னுடன் சேர்ந்து காயப்பட்டோர் நான்கு பேர்.

காட்டில் உள்ள சிங்கம் ஒன்று ஒவ்வொரு நாளும் தனக்குக் காட்டு விலங்கு ஒன்று இரையாக வேண்டும் என்று ஆணையிட்டதாம்! அது போன்றே இராணுவ முகாமும் கிழமைக்கு ஒரு குறிப்பிட்ட பேரைப்பலி எடுத்துக் கொண்டிருக்கிறது.

பெரியாஸ்பத்திரி டாக்டர்கள் எடுத்த பெருமுயற்சியால் தாய்ச் சங்கத்தைச் சேர்ந்த 3 டாக்டர்கட்கு எமது பிரச்சனையை யாழ் பெரியாஸ்பத்திரியில் வைத்து டாக்டர்கள் விளக்கியுள்ளார்கள். டாக்டர் ஸ்ரன்யோடி அல்விஸ் ரத்னப்பிரியா பியசிறி ஆகியோரின் இம் முயற்சி கூழாகுமா குஞ்சாகுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் இருப்பினும் இங்கு தமிழ் மக்கள் படும துன்பத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யப் படுத்துவதற்குத் தமது சங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும் எனச் சொல்லியது பொருத்தம் அற்றது. கைப்புண்ணைக் காட்டுவதற்குக் கண்ணாடி எதற்கு?

டாக்டர் சிவகுமார் அன்று குறிப்பிட்டது போலத் தமிழ் மக்களும் பெரியாஸ்பத்திரியும் காப்பாற்றப்பட்டே ஆக வேண்டும்.

#### நலன்புரிச் சங்கத்தின் சாதனைகள்

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு செல்லும் நோளர்கள் சமீபத்தில் தொடங்கி சில சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் நோயாளர் நலன் புரிச் சங்கத்தைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் நல்லது.

இந் நலன்புரிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஏழே ஏழு மாதங்கள்தான் ஆகின்றன.

இவர்கள் இங்கு என்னதான் செய்து கொண்டிருக்கிருர்கள் என அறிய விரும்பி அங்கு நுழைந்தேன். அங்கு மைக்கல் ராஜ் சக்திதாசன் என இரு ஊழியர்கள் வேலைசெய்து கொண்டிருந்தார்கள் உங்கள் சாதனைகள் பற்றி சிறிது சொல்லுங்கள் எனக் கேட்டு வைத்தேன்,

நாம் சாதனை என சொல்லி எதனையும் தம்பட்டமடித்துக்கொள்ள விரும்பவில்லை எமது கடமைகள் எனச் சிலவற்றை உருவாக்கி வெற்றியைச் சந்தித்திருக்கின்ரேம் என்று சக்திதாசன் ஆரம்பித்தார்.

29ம் திகதி ஷெல் அடிபட்டு மக்கள் விழுந்த நேரம் ஆஸ்பத்திரி ஊழியர்கள் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களால் வெளியே வர முடியவில்லை. காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு தூக்கி துணிகரமாகக் கொண்டுவந்த பெருமை எமக்குண்டு

'வேறு' இதுவரை 6 வார்ட்டுக்களுக்குச் சுடு நீர் கொள்கலன்கள் வாங்கிக் கொடுத்திருக்கின்ரேம் எந்த வார்ட்டிலும் இப்போது எரியாத மின்விளக்குகள் இல்லை. மலகூட கூடங்கள் வார்ட்டுகள் யாவும் வெளியார் குறை சொல்லுமளவில் இன்று இல்லை இது எமது பணிகள்.

அது மட்டுமல்ல பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் நோயாளருக்கு உதவி செய்யும் நோக்குடன் நாம் அம்புலன்ஸ் வண்டியொன்று வாங்கியுள்ளோம், எமது சேவை தொடருமென்கிருர் சக்தி.

வெளி மாவட்டங்களிலிருந்து வரும் நோயாளர்கள் உண்மையில் வசதியற்றவர்களாயின் தமது சொந்த இடங்களுக்குப் போகப் பண வசதியில்லாவிடின் தகுந்தவசதி செய்ய நோயாளர் நலன் புரிச் சங்கம் காத்திருக்கின்றது. வெள்ளையரை உயர்த்த நாடகம் எழுதியவர் பெர்ஞட்சா அவர் தான் எழுதிய காதரின் என்ற நாடகத்தில் "ரஷ்யர்கள் இரு பக்கமும் இதயமுள்ளவர்கள் எனப் பாராட்டி எழுதினுர். இங்கு அரசாங்கம் ஒரு பக்க இதயத்தில் ஆட்சி செலுத்துவதனுல்தான் இன்று இவ்வளவு பிரச்னைகளும்! இந்த நாட்டில் இரண்டு இதயங்கள் இருக்கின்றன. அதில் ஒரு இதயம் யாழ் பெரியாஸ்பத்திரியில் இருக்கின்றது.

[முற்றும்]

# "போராட்டத்தை வெற்றிபெறச்செய்ய அனைத்து இயக்கங்களும் ஒன்றுபடவேண்டும்"

— ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், திங்கள்

"மலையக மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை, குடியுரிமை 1948-ம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசினுல் பறிக்கப்பட்டது. ஆனுல் அதே உரிமைகள் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களிலே வாழுகின்ற மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது" என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த சுரேஷ் தெரிவித்தார்.

ஈழம் தபால் முத்திரையின் இரண்டாவது வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"வடக்கு-கிழக்கிலே வாழ்கின்ற மக்கள் சுதந்திரமாகப் பேச, எழுத முடியாத நிலையில்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்ருர்கள். இந்த சுதந்திரமற்ற நிலையில் வாழ எந்த மக்களும் விரும்பமாட்டார்கள்.

துப்பாக்கி ஏந்தியவர்கள் எதையும் செய்யலாம் யாரும் கேட்கமாட்டார்கள் என்ற நிலையில் இங்கு யாவும் நடக்கிறது. இது இன்னெரு அடக்குமுறையாகவே நாங்கள் கருது

(5ம் பக்கம் பார்க்க)

## அனைத்து...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கிறோம். எந்த அடக்குமுறைக்கும் நாம் அஞ்சப்போவதில்லை. சகல அடக்குமுறைகளிலிருந்து விடுபட்டு எமது மக்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியாக வாழ்வதற்கு நாம் இறுதி வரை போராடுவோம்.

தனித்து நின்று போராடி ஈழவிடுதலைப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்யலாம் என்று கருதுவது தவறு. அனைத்து விடுதலை இயக்கங்களும் ஒன்றுபடுவதன் மூலம் எமது போராட்டத்தை வெற்றியடையச் செய்யலாம் நாங்கள் எல்லோரும் ஓர் ஐக்கிய முன்னணியின் கீழ் ஒன்றுபட்டு ஒரே கருத்தில் இருந்தால் இந்திய அரசோ இலங்கை அரசோ எம்மை ஒன்றும் செய்துவிடமுடியாது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்த வரையில் விடுதலை இயக்கங்களுக்கிடையேயான ஐக்கியத்திற்காக ஆரம்பத்திலிருந்தே உழைத்து வந்துள்ளது எமது தோழர்கள் இன்னொரு இயக்கத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது கூட இயக்கங்களிடையேயான ஐக்கியத்தை கருத்தி கொண்டு எமது துப்பாக்கிகளைப் பதித்துப் பிடித்து வந்திருக்கிறோம் இன்று கூட எமக்குள் ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படவேண்டுமென்பதில் உறுதியாக உள்ளோம்.''

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட இம்முத்திரை வெளியீட்டுவிழாவில் பல்வேறு ஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கினார்கள்.

விழாவின் இறுதியில் மலையக மக்களின் வாழ்வை பிரதிபலிக்கும் ''தேசியம் பாடும் முகாரிகள்'' என்னும் கவிதா நிகழ்வு இடம்பெற்றது.


வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம் நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
ரியோ
10-30, 2-30, 4-30, 6-30
ROMANCING THE STONE
(Action and Thrills)
[Coluor]


## வடமராட்சி தாக்குதல்:

# பலியானவர் தொகை ஒன்பதாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், திங் வடமராட்சிப் பகுதியில் நடந்த பொம்பர், ஷெல், ஹெலி தாக்குதலால் மேலும் இருவர் பலியாகியுள்ளனர். இவர்களுடன் வடமராட்சியில் 3 நாட்கள் நடந்த தாக்குதலில் பலியானவர்களின் தொகை ஒன்பதாக அதிகரித்துள்ளது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த 92 வயதான மூநாட்டி ராசா இராசம்மா தலையில் 'ஷெல்' தாக்கி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தார். இவர் நேற்று முன்தினம் காலை மரணமானார்.


அச்சுவேலி வடக்கை சேர்ந்த நா. தேவசகாயம் (50 வயது) அடிவயிற்றில் ஷெல் தாக்கி இம்மாதம் 11ம் தேதி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தார். இவர் நேற்று முன்தினம் மரணமானார்.


கடைசி நேர வரி விளம்பரம்

விற்பனைக்கு

A/L வகுப்பு சித்தியடைந்த மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் உடன் விற்பனைக்கு உண்டு விண்ணப்ப முடிவு திகதி: 20-11-1986 தொடர்பு நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். C 5844

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)


## ஆர்ப்பாட்ட பேரணி

யாழ்ப்பாணம், திங்கள் தமிழ்ப் போராளிகள் மீதும் தலைவர்கள் மீதும் இந்திய அரசு அடிக்கடி ஏற்படுத்தி வரும் தடைகளையும் நெருக்கடிகளையும் எதிர்த்தும் ஆயுதங்கள் மீள ஒப்படைக்கக் கோரியும் எழுத்தாளர்கள் கலைஞர்கள் தமிழர் கலாசார அவையின் ஆதரவுடன் நடாத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் முன்றலில் ஆரம்பமாகி நாவலர் வீதி, சச்சேரி நல்லூர் வீதி முத்திரைச் சந்தை பருத்தித்துறை வீதி வழியாக நல்லூரை அடைந்து யாழ் பெரியாசனக் கோவிலைச் சென்றடையும்.


உ
சிவமயம்

# தசாக அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருஷம் ஐப்பசி மாதம் 24ம் திகதி (10-11-86) திங்கட்கிழமை பிற்பகல் சிவபதமடைந்த ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் கோவில் பிரதம குருக்கள் பண்ணிசைச் செல்வர்

சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசாமிக் குருக்கள் அவர்களின்

தசாகம் மற்றும் கிரியைகளிலும் கலந்து சிறப்புக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

19-11-86 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு தசாகம்
20-11-86 வியாழக்கிழமை காலை ஏகோதிஷ்டம் மாசியம்
21-11-86 வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்
22-11-86 சனிக்கிழமை சுத்திபுண்ணியாகம் கிரகயக்ஞம் (மதியபோசனம்)

ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் கோவில், உரும்பராய் C 5847)

இங்ஙனம் மனைவி, பிள்ளைகள்.



JUST HOP IN ONCE YOU WON'T FORGET THE TASTE

R·S·R·

Green Peking Pa'ace
(Chinese Restaurant)

OPEN FROM 9.00 a.m. TO 11 00 p.m.




மிகவும்பாதுகாப்பான இடம்
ரம்மியமான சூழல்
அன்பான உபசரிப்பு
அநுபவம் மிக்கவர்களின்
நவீன பாணியில் நாவுக்கினிய
உணவுவகைகள்

யாழ். நகரிலேயே
அதிகுறைத்த விலையில்

Chinese Meals
Short Eats
Ice-Creams
Lunch Packet 16/-
Buriyany 25/-
Fried Noodles Rs; 16/- - 25/-
Fried Rice Rs. 16/- - 25/-
Etc. Etc. Ete. Etc. Etc.

69, 4th Cross Street, Jaffna.
T/Phone: 23873 [A-881]


## நோயாளிகள்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டில்களும் வெறுமையாகக் காணப்பட்டன இந்த வார்ட்டில் சில நோயாளிகள் கீழ்ப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். மற்றவர்கள் பாதுகாப்புக் கருதி வீடு திரும்பியுள்ளனர்.

18ம் வார்ட்டிலிருந்து நேற்று 13 நோயாளிகளும் நேற்று முன்தினம் 8 நோயாளிகளும் வெளியேறியுள்ளனர். நேற்று புதிதாக ஐவர் மட்டும் இந்த வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர்.

8ம், 9ம்வார்ட்டுகளிலும் சில கட்டில் காலியாகவுள்ளன. 25ம் வார்ட்டிலும் சில கட்டில்கள் காலியாகவுள்ளன. 6ம், 7ம் வார்ட்டிற்குச் செல்லும் விறாந்தையிலுள்ள கட்டில்களும் வெறிச்சோடியுள்ளன. 4ம் வார்ட்டுகளிலும் சில நோயாளிகள் மட்டுமே உள்ளனர். பிரசவ வார்ட்டுகளிலும் கட்டில்கள் காலியாகவுள்ளன.

இன்று போகுமாறு டாக்டர் ஆலோசனை கூறியிருந்த போதும் வயோதிபத் தாய் ஒருவர் நேற்றுமாலையே வீடு திரும்பினார்.

எதற்காகப் போகிறீர்கள் என்று அப்பெண்ணிடம் கேட்டபோது 'வார்ட் எல்லாம் வெறிச்சோடியிருப்பதால் இங்கிருக்கப் பயமாக இருப்பதாக' கூறினார்.

சில வார்ட்டுகளில் இன்று செல்வதற்கான ஏற்பாடுகளைச் சில நோயாளிகள் செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. (ஓ)

## உயிலங்குளம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்ததுடன் அதில் வந்த ராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நேற்றுக்காலை 8 மணியளவில் தள்ளாடி ராணுவமுகாமில் இருந்து 100 ற்கும் மேற்பட்ட ராணுவத்தினர் தென்னாபிரிக்காவில் இருந்து அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட இரு பவல் ஆமட்கார்கள், இரண்டு டிறக்வண்டிகள், இரு ஜீப்வண்டிகள் சகிதம் முருங்கன் முகாம் நோக்கி நேராகச் சென்று கொண்டிருந்த சமயம் எமது வீரர்கள் உயிலங்குளத்தில் வைத்து ஒரு பவல் ஆமட்காருக்கு தரைக்கண்ணி வெடித்தாக்குதல் நடாத்தியதில் அதில் சிக்குண்ட பவல் தூக்கியெறியப்பட்டு பலத்த சேதத்திற்குள்ளானது. அதில் வந்த அனைத்து ராணுவத்தினரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் கண்ணி வெடித்தாக்குதலின் பின்பு ஏற்பட்ட நேரடி மோதலின் இறுதியில் ராணுவத்தினர் பலத்த சேதத்திற்கு உள்ளான பவலின் பாகங்களை மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே அவ்விடத்தை விட்டு எடுத்துச் சென்றனர். (ஊ)

## அனுமதி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முடன் ஒத்துழைக்குமாறும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ஈழம் தபால் சேவை, றேடியோ, ரி.வி. டெக்போன்றவற்றிற்கான அனுமதிப் பத்திரங்களை யாழ் குடாநாட்டிற்குள் சகல விநியோகம் தபால் நிலையங்களிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் எமது ஸ்தாபன காரியாலயங்களிலும் எமது பிரதிநிதிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் தபால நிலையங்கள் திறந்திருக்கும் நாட்களில் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

''வேறு பிரதேசங்களுக்கு இராணுவ முகாமைத் தாண்டி றேடியோ, ரி.வி, டெக் கொண்டுசெல்ல விரும்புவோர் ''ஈழதேசிய நிர்வாகச் செயலகத்துடன் தொடர்புகொள்ளும்படி வேண்டுகிறோம் குறிப்பிட்ட திகதிக்குப் பின் அனுமதிப்பத்திரங்கள் பெறாத றேடியோ, ரி.வி, டெக் போன்றவை கண்காணிப்புக் குழுவால் பறிமுதல் செய்யப்படும்''.

## களவுபோன---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யான சைக்கிள்களும் அடங்குகின்றன.

மீட்கப்பட்ட சைக்கிள்களின் இனம், இலக்கம் வருமாறு:

பிளையிங்பிஜன் 2 இலக்கம்: MS 25 LD 4011, (இரண்டு பெண்களுக்கானது) றலி 11 இலக்கங்கள். AY 47206, 497907, OH 18911 AK 2530 CC 1156, DP 410, EH 38169, DC 47639, A 1117, AU 66767, ஹீரோ 3 இலக்கங்கள் HP 58567, LH 58137 LH 90488, பொனெக்ஸ் இலக்கம் CM 08177.

மேற்படி இலக்கம் கொண்ட சைக்கிள்களின் உரிமையாளர்கள் சம்முடன் தொடர்பு கொண்டு தகுந்த அத்தாட்சிப் பத்திரங்களைக் காட்டி பெற்றுச் செல்லலாம்என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது. (வா)

## அடையாளம்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்றை விடுத்துள்ளனர்.

அவசரமருத்துவ சேவையினர் தமது வேண்டுகோளில்மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ் நகரப் பிரதேசத்திற்குள் கண்டபடி கூட்டம் கூடி நின்று தைத்தல் போன்றவற்றைத் தவிர்த்து உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஸ்ரீலங்கா அரசபடைகளின் முழுநோக்கம் முக்கிய நகரப்பகுதிகளையும், எம் மக்களையும் இலக்காக தொழிப்பதே இவற்றிலிருந்து எம்மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு எமது அவசரசிகிச்சையினரால் துரித சிகிச்சைவண்டி 'அன்புலன்ஸ்' யை 24 மணி நேரமும் யாழ். நகரத்திற்குள் சேவையிலீடுபடுத்தியுள்ளோம். எனவே மக்கள் வெளியே நடமாடும்போது ஒவ்வொருவரும் தம்மை அடையாளப்படுத்தும் வகையில் குறிப்பொன்றை வைத்திருக்க வேண்டும். இது உங்களுக்கு விபத்துநடந்தால் உறவினருக்கு அவ்விபத்தைப் பற்றி அறிவிக்க உதவியாகஇருக்கும். (ஊ)

## பெங்களூரில்---

(1-ம் பக். தொடர்ச்சி)

ளவரும் வாழ்கின்றனரெனக் காட்டப்பட்டுள்ளது.

தொடர்ந்து நேற்றைய சார்க் மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ஜெயவர்த்தனா இலங்கையில் பாதுகாப்புப் படையினர்களுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே மோதலில் அப்பாவிமக்கள் கொல்லப்படுவதாகவும், இதுதமக்குமிகுந்த கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கு இந்தியா தனது பூரண ஒத்துழைப்பைவழங்க வேண்டுமெனவும்கேட்டுக் கொண்டார்

பெங்களூரில் இலங்கை இனப்பிரச்னை குறித்து பேச்சுக்கள் விரிவான முறையில் தமிழக, இலங்கை, இந்திய முக்கியஸ்தர்களிடையே ஒரு முடிவைத் தேட தீவிரமாக இடம் பெறுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

# பிரயாண ஒழுங்குகள்

## (முக்கிய அறிவித்தல்)

### நஷனல் கிளீனிங் கொம்பனி - குவைத்

| | | | |
|---|---|---|---|
| 1. | S. முருகதாஸ் | அச்சுவேலி | H 0360186 |
| 2 | P. கிருஷ்ணமூர்த்தி | | H 0296768 |
| 2. | S R பிரபாகரன | | H 0143701 |
| 4. | K. செல்வநாயகம் | காங்கேசன்துறை | H 0325412 |
| 5. | K.V செல்வவீரசிங்கம் | | H 0072971 |
| 6 | K தவலிங்கம் | புத்தூர் | H 0285169 |
| 7. | K. ராஜ ட்ணம் | பலாலி | J 0082142 |
| 8. | P. கிருஷ்ணராஜா | புத்தூர் | J 00*3 61 |
| 9. | K ரவீந்திரன் | சங்கானை | H 0324689 |
| 10. | V E விகிதராஜா | | H 03 0570 |
| 11 | CT K. பார்த்திபன் | ஊரெழு | H 0349901 |
| 12 | M N. மரிசூக் | அச்சுவேலி | H 0422006 |
| 13 | K கிருபாகரன் | யாழ்ப்பணம் | J 00873 2 |
| 14 | K ராஜரட்ணம் | சண்டிலிப்பாய் | G 015 399 |
| 15 | K சிவகுமாரலிங்கம் | கைதடி | J 00-1310 |
| 16. | V. சரவணபவன் | பருத்தித்துறை | G 0324992 |
| 17. | S தெய்வேந்திரா | கோண்டாவில் | H 0154005 |
| 18 | R உதயமனோகரன் | சுன்னாகம் | H 0305327 |
| 19. | V R லோகநாதன் | | G 0461485 |
| 20 | N S ஆனந்தராஜா | | G 0313457 |
| 21 | P இதயராஜா | சண்டிலிப்பாய் | H 0474058 |
| 22 | S V. வசந்தன் | | H 0194244 |
| 23. | N V. கந்தசாமி | | H 036 116 |
| 24 | M V சதானந்தன் | | H 0297223 |
| 25 | N S S சந்திரபோஸ் | கோண்டாவில் | H 0098053 |
| 26. | S சூரியகுமார் | | H 0390261 |
| 27 | K P கீதராஜா | | H 0314505 |
| 28. | K N சண்முகநாதன் | | H 0198135 |
| 29 | V பேரின்பதேவன் | அச்சுவேலி | H 0346696 |
| 30. | S T ராஜகுமார் | | H 036 798 |
| 31 | S P சிறீசாந்தரூபன் | யாழ்ப்பாணம் | H 0431354 |
| 32 | R K இராசகுமார் | கோண்டாவில் | J 0083487 |
| 33 | P குணவேந்திரன் | திருநெல்வேலி | E 181911 |
| 34 | S ஞானசேகரம் | கோண்டாவில் | H 0306655 |
| 35. | V A சண்முகராஜா | ,, | J 0031141 |
| 36 | B M. புஸ்பநாதன் | ,, | H 0272496 |
| 37 | V K. குலதேவசிங்கம் | | H 0405754 |
| 38 | J C அமரின் | ஊர்காவற்றுறை | J 00 0209 |
| 39 | R. விஜயநாதன் | மீசாலை | F 0 29024 |
| 40 | P விஜயபாஸ்கரதாசன் | | J 0000871 |
| 41. | S சுதாகரன் | யாழ்ப்பாணம் | H 0358066 |
| 42 | C C பிரான்சிஸ் | | H 0287986 |
| 43 | S ஏகாம்பரநாதன் | அளவெட்டி | H 0465630 |
| 44 | P விஜயபவன் | சங்கானை | H 0260185 |
| 45 | P சந்திரதாஸ் | | J 067991 |
| 46 | T. சிவகுமார் | இருபாலை | G 0300480 |
| 47 | V P வாசு | | H 039 415 |
| 48 | S மகாலிங்கம் | | J 0043323 |
| 49 | S. செல்லத்துரை | | H 0350967 |
| 50 | M மகேஸ்வரன் | | H 0320008 |
| 51. | P P உதயகுமார் | | H 025049 |
| 52 | V சுப்பிரமணியம் | | H 0358521 |
| 53 | N சிவராசா | | H 0367324 |
| 54 | P S ராஜா | | H 0221243 |
| 55. | T சந்திரகுமார் | | H 0349045 |
| 56 | N P ஜெயக்குமார் | | H 0316289 |
| 57. | P. கிருஷ்ணராஜா | | J 0083661 |
| 58 | K. ஜெயராம் | | J 1056335 |
| 59. | S. அனரன் | | J 0056345 |
| 60. | S. சத்தியசீலன் | | H 0429428 |
| 61. | S. ராஜேஸ்வரன் | | H 0331167 |
| 62 | N ராசரட்ணம் | | J 0061351 |
| 63 | A சண்முகநாதன் | | H 0280860 |
| 64 | P M நசீர் | | H 0226991 |
| 65 | S S ஜெயச்சந்திரன் | | H 0072903 |
| 66 | P S சுப்பிரமணியம் | | H 0287568 |
| 67 | V பாலசுப்பிரமணியம் | | H 1382045 |
| 68 | S-N வரதராஜா | | H 0279326 |
| 69 | S K. உதயகுமார் | | H 0042521 |
| 70 | K T கிருஷ்ணராஜா | | H 0305088 |
| 71 | K M பரமலிங்கம் | | J 0076553 |
| 78 | R S பரமசாமி | | H 0 82275 |
| 73 | S மயில்வாகனம் | | G 0284343 |
| 74 | N நற்குணநாதன் | | G 0021590 |
| 75 | N.P திருச்செல்வம் | | G 0344523 |
| 76. | N P யோகராஜா | | H 0205209 |
| 77. | V. K நாகேந்திரன் | | G 0345268 |
| 78 | T. தெய்வேந்திரம் | | G 0303621 |
| 79 | S இராசகுமார் | | H 0418597 |
| 80 | P J. ஜெயராசா | | H 0053834 |
| 81. | C தனபாலன் | | G 0071971 |
| 82 | V I. கனகராசா | | H 1314219 |
| 83 | N முத்துராஜா | | H 0386960 |
| 84 | T. ஆசைராஜா | | H 0205364 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் உடனடியாக எனது அலுவலகத்திற்கு வந்து உங்கள் ஒப்பந்தங்களை கைச்சாத்திடும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## யூனிவேர்சல் ஏஜென்சி
## 125 (455) ஸ்ரான்லி வீதி,
## யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக).

A 2877



## 60-வது பிறந்த நாள்

சஷ்டி அப்த பூர்த்தி



### கந்தப்பிள்ளை பூபாலசிங்கம்

சுருவிலைப் பிறப்பிடமா கொண்ட திரு கந்தப்பிள்ளை பூபாலசிங்கம் அவர்கள் தனது 60வது பிறந்தநாளை இன்று கோண்டாவில் இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை மனைவி, லீலாவதி பிள்ளைகளான சூரியகுமாரி, அசோகன் (சுவிற்சலாந்து, சந்திரகுமாரி, யசோதரன் (ஜேர்மனி,) சுரேந்தன் சுவிற்சலாந்து). மருமகன், குமணன் மருமக்களான நாகேந்திரபிள்ளை, வேலாயுதபிள்ளை பேரப்பிள்ளைகளான உதயசங்கர். வசீகரன், மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். C 5810

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் கதிர்காமு தம்பிஐயா

மலர்வு: 10-02-1922
உதிர்வு; 19 10-1986

பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே, அன்பினால் எமைவளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்பு தெய்வமே, ஐயா, அருத்துயரத்தில் எமை விட்டு மீளாத இடம்போனீரோ மீளிர்கு. அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் 18-11-86ம் திகதி மட்டுவில் தெற்கு இல்லத்தில் நடைபெறும் உறவினர்கள், நண்பர்கள் எமக்கு ஆதரவு நல்கியவர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்க அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
மட்டுவில் தெற்கு,
நுணுவில். C 5740



# Jaffna College Technical Insitute, Vaddukoddai.

## புதிய தொழில்நுட்பக் கல்வி வகுப்புகள்-1987.

I. Diploma in Draughtsmanship (Civil)
மனை நிர்மாண பட வரைஞர்
(தவணைக்கு ரூபா 750/-)

II. Diploma in Computer Programming and Data Processing (Basic + Cobol)
கணனி இயக்கப் பயிற்சி
(தவணைக்கு ரூபா 1500/-)

1 வருட, 2 தவணை முறை, முழுநேர வகுப்புகள் 12-1-87 இல் ஆரம்பமாகின்றன

22 வயதுக்குட்பட்ட இரு பாலாரும் குறைந்தது G. C. E. [O/L] தராதரத்தில் கணிதம், விஞ்ஞானம் உட்பட 3 பாடங்களில் விசேட சித்தியுடன் 6 பாட சித்தியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் பத்திரம் ரூபா 10/- காரியாலயத்தில் பெற்று 15-12-86 கு முன்பு விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்.
[A-3087]

# பிரயாண ஒழுங்கு

## முக்கிய அறிவித்தல்

### நஷனல் கிளீனிங் கொம்பனி, குவைத்.

| | | | |
|---|---|---|---|
| 1. | K. T. பாலசுப்பிரமணியம் | சுன்னாகம் | G 0384126 |
| 2. | S S. யேசநாதன் | நல்லூர் | G 0374481 |
| 3. | N K சிறீதரன் | அல்வாய் | J 0009*18 |
| 4. | N N. அன்ரனி | யாழ்ப்பாணம் | G 030 547 |
| 5. | V S. தங்கேஸ்வரன் | இணுவில் | H 0044193 |
| 6. | A யோகேஸ்வரி | தாவடி | F 235776 |
| 7. | R. ஜெயமலர் | உடுவில் | H 0007311 |
| 8. | N. நகேந்திரகலா | சுன்னாகம் | H 0455169 |
| 9. | S. சீதிமாலா | கைதடி | H 0498843 |
| 10. | V K. ரட்ணசிங்கம் | மூளாய்த்தீவு | H 0027548 |
| 11. | A S. குமாரசாமி | மாதகல் | G 0484893 |
| 12. | A S பாலசுப்பிரமணியம் | நல்லூர் | G 0484646 |
| 13. | G பெனடிக் | பண்டத்தரிப்பு | H 0127707 |
| 14. | S சிவராஜா | மானிப்பாய் | J 086852 |
| 15. | S குகபாலன் | தெல்லிப்பளை | H 0292157 |
| 16. | M A யோகலிங்கம் | உடுவில் | J 0067559 |
| 17 | S N கீர்த்திசிங்கம் | நல்லூர் | H 04*8794 |
| 18 | K சேதீஸ்வரன் | கோண்டாவில் | H 0317961 |
| 19. | K N. தனசயராசா | உடுவில் | J 0068929 |
| 20 | S நிகலநாதன் | மானிப்பாய் | H 03 3632 |
| 21. | N N மனோகரன் | இணுவில் | J 0100285 |
| 22. | S வரதராசா | உருபபிராய் | H 0328215 |
| 24. | S. ஜெயபாலன் | சுன்னாகம் | G 0344191 |
| 25. | C. பாலசுப்பிரமணியம் | நல்லூர் | G 0319998 |
| 26. | S N. சிவகுமார் | ஆனைக்கோட்டை | H 0376962 |
| 27. | P ஜெயதாசன் | ஆனைக்கோட்டை | H 0471700 |
| 28. | M சிவராஜா | திருநெல்வேலி | J 0067200 |
| 29. | K, T. ஜெகதீசன் | யாழ்ப்பாணம் | H 0041398 |
| 30. | G. சண்முகநாதன் | யாழ்ப்பாணம் | G 0165774 |
| 31. | S பவனேந்திரராஜா | திருநெல்வேலி | F 109476 |
| 32. | V. V ஜெகதீஸ்வரன் | அல்வாய் | H 0152962 |
| 33. | S. தர்மரட்ணம் | சுன்னாகம் | H 0303107 |
| 34. | V. T. தர்மராஜா | நல்லூர் | H 0446258 |
| 35. | R. ஆறுமுகப்பிள்ளை | கொக்குவில் | G 0247127 |
| 36. | S. M ரவீந்திரன் | கல்வியங்காடு | H 0372021 |
| 37. | K. கமலநாதன் | சுன்னாகம் | H 0369591 |
| 38. | N. குணபாலன் | நல்லூர் | F 238903 |
| 39. | T. நற்குணசீலன் | மானிப்பாய் | J 0084107 |
| 40. | S. K தயாளன் | கொக்குவில் | J 0036999 |
| 41. | T. மோகனகீதன் | தெல்லிப்பளை | J 0026205 |
| 42. | L. செல்வகுமார் | இளவாலை | H 0419247 |
| 43. | N. கணேசமூர்த்தி | இணுவில் | H 0158275 |
| 44. | K. J, ஜெகதாசன் | மானிப்பாய் | J 0080227 |
| 45. | K. விஜயகுமார் | சுதுமலை | H 0273123 |
| 46. | M. I. இராசலிங்கம் | மாதகல் | H 0118829 |
| 47. | M. வரதலிங்கம் | கைதடி | H 1331268 |
| 48. | P. S. சிவகுமாரன் | இணுவில் | H 0293454 |
| 49. | S. S. நிமல்தரன் | கோபபாய் | J 0076420 |
| 50. | K. விஜயகாந்தன் | யாழ்ப்பாணம் | H 0353253 |
| 51. | N. இராஜேந்திரபாலன் | யாழ். | G 0213884 |
| 52. | P. மகேந்திரன் | சுதுமலை | H 0108002 |
| 53. | V. பண்டாரம் | | F 336195 |
| 54. | N. R. கந்தசாமி | குப்பிளான் | H 0111172 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் உடனடியாக எனது அலுவலகத்துக்கு, வந்து உங்கள் ஒப்பந்தங்களை கைச்சாத்திடும்படிகேட்டுக்கொள்கின்றேன்.

## டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்

பிரசாந்தி வைத்திய நிலையம்
(கற்பகப்பிள்ளையார் கோவிலடி)
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னுள்ள உள்ள ஒழுங்கையால் வரவும். [A-2876]

## படையினர் தேடுதல் வேட்டை

யாழ்ப்பாணம், திங்கள் திருமலை மாவட்டத்தில் உள்ள கூனித்தீவு உப்பு வெளி ஆகிய பகுதிகளில் 500க்கு மேற்பட்ட இராணுவத்தினரால் நேற்று முன்தினம் சுற்றி வளைக்கப்பட்டு பலத்த தேடுதல் வேட்டை நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இப் பகுதிகளில் விட்டுச் சென்ற பழைய முகாம்களை இராணுவத்தினர் கண்டு பிடித்துச் சேதப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (மா)


# பவர்ஸ் உரம்

## இணையற்றது

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி; 20551-6

ரூபா 2,000/- க்கும் மேல்


## "எழுக மலையகம்" முத்திரை

யாழ்ப்பாணம். திங்கள் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட தினத்தையொட்டி நேற்று முன்தினம் மாலை "எழுக மலையகம்" புதிய முத்திரையொன்றினை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ளது. இதன் பெறுமதி 50 சதமாகும்.

இளம் பச்சை கரும் பச்சையுடன் கூடிய இந்த முத்திரையின் அடியிலுள்ள சிவப்பு நிற தடித்த கோட்டில் எழுக மலையகமென்னும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக் கவரின் இடது புற வலது மூலையிலுள்ள இப் புதிய முத்திரையில் ஈழம் 1948 நவ. 15 என்னும் எழுத்துக்களுடன் மலையகப் பெண்ணொருவர் தனது முதுகுப் புறத்தில் கூடையொன்றை தாங்கி தேயிலைக் கொழுந்து பறிக்கும் காட்சி அச்சிடப்பட்டுள்ளது

இம் முத்திரையைத் தாங்கிய வெள்ளைக் கவரில 1948 நவம்பர் 15 மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட தினம். முதல்நாள் கவர் 15-11-86 ஈழ விடுதலைப் போராட்டம் வெல்க என்னும் வாக்கியங்களுடன் மலையகப் பெண்கள் கொழுந்து பறிக்கும் காட்சியும் அச்சிடப்பட்டுள்ளது. [வா]

## தெல். காசி விநாயகர் இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், திங்கள் தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று விநாயகஷஷ்டி விரதம் ஆரம்பமாகின்றது. இன்று முதல் நவம்பர் 5ம் திகதி வரை தினமும் இலட்சார்ச்சனை நடைபெறும். நவம்பர் 6ம் திகதி விநாயகசஷ்டியன்று பகல் அஷ்டோத்தர சத சங்காபிஷேகம் நிகழும். (ப)

## இந்திய

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வங்களையடுத்து இலங்கைஅரசு இலங்கைத் தமிழர்கள் மீது பாரிய இராணுவத் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## நாளை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், திங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்திற்கு மேற்படி கல்லூரியின் பழைய மாணவரும் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளருமான கலாநிதி சபா. ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள திருமதி மானுமதி ஜெயராசா பரிசில்கள் வழங்குவார். [வா]


## பருத்தித்துறை — புலோலி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியுடைய 18 வயது முதல் 45 வயது வரையுள்ள இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

| பதவி | கல்வித் தகைமை | சம்பள விகிதம் |
|---|---|---|
| 1. பொதுமுகாமையாளர் 101 : 9 | கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடத்துக்குக் குறையாத அனுபவம், அல்லது 11வது சம்பள திட்டத்தில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம், அல்லது அதற்கு இணையான தகைமை, அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாட சித்தியுடன் தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மேற்பார்வை மட்டத்தில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம். | 400—720<br>20X10 — 30X4 |
| 2. கணக்காளர் 104 : 10 | கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது 12வது சம்பளத்திட்டத்தில் நாலு வருடத்துக்குக் குறையாத அனுபவம், அல்லது ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப்பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறையில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ த. (உயர்தரம்) கணக்கியல் உள்ளடங்கிய மூன்று பாட சித்தியுடன் ஸ்தாபனம் ஒன்றில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம். | 350 — 615<br>15X7 — 20X8 |
| 3. எழுதுனர் 302 : 14 | க, பொ. த. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளில் எண்கணிதம் / கணிதம் / கணக்கியல், தமிழ்மொழி ஆகிய பாடங்களை உள்ளடக்கிய 6 பாடங்களில் சித்தி. தமிழ் தட்டச்சு தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | 195 — 345<br>10 X 10 — 12.50 X 4 |
| 4. கிளை முகாமையாளர் 208 : 14 | கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டத்துக்குரிய பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர [சாதாரணம்] / க. பொ த, (சாதாரணம்) தரத்தில் எண்கணிதம்/ கணிதம்/கணக்கியல், தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் - (2 அமர்வுகளில்) சித்தி. | 195 — 345<br>10 X 10 — 12.50 X 4 |

விண்ணப்பங்கள் யாவும் 1-12-86ற்கு முன்பு கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம், அல்லது நேரடியாக;

**தலைவர்,**

**பருத்தித்துறை — புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,**

**மந்திகை, புலோலி.**

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் தனித் தனியே விண்ணப்பித்தல் வேண்டும் சங்க எல்லைக்குட்பட்ட அங்கத்தவர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும், சங்க ஊழியருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

தலைவர்,
பருத்தித்துறை—புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம்,
மந்திகை, புலோலி.

C 5827


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் அப்பாக்குட்டி தேவசுந்தரம்
(சுராஜ் தம்பி)

தோற்றம்: 23-02-1926
மறைவு: 19-10-1986
திதி: 18-11-1986

எங்கள் அன்பின் திருவுருவே, பண்பின் உறைவிடமே. பாசமலரே, கள்ளமில்லா வெள்ளையுள்ளம் கொண்டவரே உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்திலே அணையா தீபமாய் என்றும் ஒளி வீசுகையா இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம் திடீரென எம்மை விட்டுப்பிரிந்த எம் குடும்பத்தலைவனது இறுதிச் சடங்குகளில் கலந்து எமக்கு ஆறுதல் கூறியும், அனுதாபத் தந்திகள், மடல்கள் வழியாக எம் துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும் எம் இதயங்கனிந்த நன்றிகள்.

18-11-86 செவ்வாய்க்கிழமை அந்தியேட்டி கிரிகைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்,
பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.
கோண்டாவில் கிழக்கு

C 5779

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 17-11-86

# விஜிதரன் விவகாரம்: குறுக்கீட்டின் மத்தியிலும் உண்ணுவிரதம் தொடருகிறது!

## புதன் இறுதிக்கட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

கடத்தப்பட்ட பல்கலைக் கழக மாணவன் அ. விஜிதரனை விடுவிக்கக் கோரும் பல்கலைக் கழக மாணவரின் 2ம் கட்ட உண்ணுவிரதம் இன்று ஆரம்பமாகின்றது.

நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத மூவர் பல்கலைக் கழக பாதுகாப்பு ஊழியரின் அனுமதியின்றி மதில் மேலாக ஏறிக்குதித்து பல்கலைக்கழக வளவினுள் புகுந்துள்ளனர்.

இதுகுறித்து பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: "அம்மூவரிடமும் ஏன் வந்தீர்கள்? என்று கேட்டதற்கு இயற்கை காட்சியைப் படமெடுக்கவந்ததாக கூறியுள்ளார்கள். இப்படியான அனுமதியில்லாத மீறல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். போராட்டம் நடந்துகொண்டிருக்கின்ற வேளையில் அதுவும் கேற் பூட்டியபின் ஒருவர் பல்கலைக்கழக வளவுக்குள் பிரவேசிக்க வேண்டுமாயின் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களினதும் அனுமதியைப் பெறுதல்வேண்டும்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

நேற்றைய அடையாள உண்ணுவிரதத்தை சட்டத்தரணி பொ. சிவபாலன் அவர்கள் முடித்துவைத்து உரையாற்றினார். அவர்பேசுகையில்,

"விடுவிக்கப்பட்டபிரதேசத்திலே மாணவன் விஜிதரன் காணமல் போயிருக்கிறான். இம்மாணவன் எங்கேயென்று கண்டுபிடிக்காவிட்டால் இயக்கங்கள் எவ்வாறு கிழக்குமாகாணத்துக்குப் போகப்போகின்றன. இயக்கங்கள் இதற்குப் பொறுப்புக் கூறியே தீரவேண்டும். கிராமங்கள் எல்லாம் இதற்கு எதிரான போராட்டத்தை நடாத்தவேண்டும். இயக்கங்களைக் கண்டிக்கின்ற உரிமை மக்களுக்கு உண்டு. போராட்டங்கள் ஒவ்வோர் இயக்கங்களின் பாசறைக்கு முன்னால் நடைபெற வேண்டும்" என்றார்.

இதேவேளை நாளை காலை மணிக்கு 3ம் கட்ட உண்ணுவிரதம் ஆரம்பமாகும். இவ்வுண்ணுவிரதம் 19ந் திகதி புதன்கிழமை வரை நீடிக்கும்.

புதன்கிழமை காலை 9 மணிக்கு திட்டமிட்டபடி இறுதிக் கட்ட போராட்டமானசாகும் வரை உண்ணுவிரதப் போராட்டம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 30ந் திகதிக்குமுன் ஓய்வூதியம் பெறப்படவேண்டும்

யாழ்ப்பாணம், செவ்.

86ம் ஆண்டு அக்டோபர் மாத ஓய்வூதியம் இம் மாதம் 30ம் திகதிக்குமுன் பெறப்பட வேண்டும் என்று ஓய்வூதியம் தொடர்பாக நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

யாழ் மாவட்டத்தில் முன்னர் தபாலகங்கள் மூலம் ஓய்வூதியம் பெற்றவர்கள் தங்கள் ஓய்வூதியத்தை வர்த்தக வங்கி கிராமியவங்கி ஒன்றிற்கு மாற்றும்படி வேண்டுகோள்விடுத்த ஓய்வூதியம் பெறுவோரின் 1986ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இரண்டாவதும் மூன்றாவதும் ஓய்வூதியப் பட்டியல்களும் சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களும் அந்த அந்த வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே முன்னர் தபாலகங்களின் மூலம் ஓய்வூதியம் பெற்று பின்பு வர்த்தக வங்கி கிராமிய வங்கி ஒன்றுக்கு தங்கள் ஓய்வூதியத்தை மாற்றுமாறு விண்ணப்பித்த ஓய்வூதியம் பெறுவோர், சம்பந்தப்பட்ட வங்கிக்குச் சென்று, தங்கள் பற்றுச் சீட்டைப் பெற்று, ஆவன செய்து, தங்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## நெருக்கடியான காலகட்டம்: "நாம் நம்பவேண்டியது போராளிகளையே!"

### — ஊழியர் பிரசுரம்

யாழ்ப்பாணம், திங்

"நமது நிலம் பறிக்கப்படுகிறது. நமது பொருளாதாரவளம் சீரழிக்கப்படுகிறது. நமது கலை, கலாசாரம் பாழடிக்கப்படுகிறது. நமது மக்களின் உயிர் உடைமை அனைத்தும் எரிக்கப்படுகிறது; நமது இறைமை, உரிமை அனைத்துமே நிராகரிக்கப்படுகின்றது. இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில் நாம் நம்பவேண்டியதும்பலப் படுத்தவேண்டியதும் நமது விடுதலைப் போராளிகளை மட்டுமே"

இந்தியாவில் தமிழ் போராளிகள் தடுப்புக்காவல் தொடர்பாக இன்று நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை யிட்டு அரச கூட்டுத்தாபன கூட்டுறவு, வங்கி, சபைகள் தனியார் ஊழியர்கள் விடுத்துள்ள துண்டுப்பிரசுரமொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப்பிரசுரத்தில் மேலும் இந்திய மத்திய அரசே தமிழக அரசே எமது போராளிகள் மீது தடைகள் ஏற்படுத்துவதை நிறுத்துங்கள் எமது ஆயுதங்களை எம்மிடமே திருப்பி ஒப்படையுங்கள். என்று தெரிவிக்கப்பட்டுள்து. (ரா)

## பொறியியல் மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட மாணவர்களனைவரும் இன்று 17ம் திகதி திங்கட்கிழமை 2 மணியளவில் யாழ் பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ள முக்கிய கூட்டத்திற்கு தவறாது சமுகம்தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## வடமராட்சி---

(7-ம் பக்கம் பார்க்க)

வந்த பல கடைகள் இவர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டன.

இந்நிலையங்களின் உரிமையாளர்கள் இந்த மருத்துவக் குழுவினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திரும்பவும் பாவனையாளர்களைப் பாதிக்கக் கூடியமுறையில் செயற்பட்டால் கடுந்தண்டனை வழங்கப்படுமென்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். (கே)

## யாழ் நோக்கிவரும் தனியார் வாகனங்கள் மதவாச்சியில் கடும் சோதனை

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் தனியார் வாகனங்கள் மதவாச்சிக்கு அண்மையில் வைத்து நேற்றுமுன்தினம் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டன.

லொறி ஒன்றைத் தடுத்து நிறுத்திய இராணுவத்தினர் லொறிக்குள் இருந்த சூட்கேசுகளைத் திறக்கும்படி உத்தரவிட்டனர். சூட்கேஸுகள் பூட்டப்பட்டிருப்பதாகவும் அதன் சாவிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள உரிமையாளரிடம் இருப்பதாகவும் சாரதி சொன்னார்.

சூட்கேஸுகளை அவசியம் திறந்து சோதனையிடவேண்டுமென்று தெரிவித்த இராணுவத்தினர் லொறியை அந்த இடத்தில் விட்டுவிட்டு சாவிக்கொத்தை வாங்கிவரும்படி சாரதிக்கு உத்தரவிட்டனராம். இதனைத் தொடர்ந்து சாரதி யாழ்ப்பணம் வந்து சென்றதாகத் தெரிவிக்கபபடுகிறது. (மா)

# மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிவலிங்கம்

சுழிபுரம் பறுளாய் றோட் சின்னத்துரை சிவலிங்கம் (Bank of Ceylon) 16-11-86 ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சிவதுரை (ஜேர்மனி), சிவடுஷ்பா, சிவகங்கா சிவலிஜயா, சிவஜமுனா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுந்தரராஜன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமனாருமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் 18-11-86 செவ்வாய் பிற்பகல் 4-00 மணிக்கு திருவடிநிலை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் தருபவர்: S. முருகவேல்

(C-5845)

### ஆதிமூர்த்தி ஞானகரன் / ஆதிமூர்த்தி கருணாகரன்

சங்கானை மேற்கு பண்டத்தரிப்பு (வடலடைப்பு) காலஞ்சென்ற மலாயன்பென்சனர் செல்லப்பா சின்னத்தம்பி, நாகம்மா ஆகியோரின் பேரர்களும், இளைப்பாறிய கட்டிடத் திணைக்களப் பரிசோதகர் சிவலிங்கம் ஆதிமூர்த்தி - சிவபாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வர்களும், அரிஅரன் (கணக்காளர் ட்ரான்ஸ் லங்கா), கிருபாகரன் (பொறியியலாளர், பாட்லீட் எலெக்ரோனிக்ஸ்) ஆகியோரின் இளைய சகோதரர்களுமாகிய ஞானகரன் (கணக்கியல் மாணவன்), கருணாகரன் (கணனியியல் மாணவன்) ஆகியஇருவரும் லண்டனில் 14-11-86 (வெள்ளி) இரவு அகாலமரணமெய்திவிட்டனர். தகனக்கிரியைகள லண்டனில் நிறைவேற்றப்பட்டன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். C 5841

### இராமலிங்கம் சிவனடியான்

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த இராமலிங்கம் சிவனடியான் காலமாகிவிட்டார் இவர் புவனேஸ்வரியின் கணவரும் திருமதி இரஞ்சிதமாலா கருணாகரன் (வதனி/ France) தர்சினி, றஞ்சி, செந்தில்நாதன (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் கைலாசபிள்ளை, மகேஸ்வரி நவரஞ்சிதமலர், அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும், கந்தசாமி, கனகம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை, துரைரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் தாமோதரம்பிள்ளை, இராசலிங்கம், நடராசா (Indonesia) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியை (நாளை) 18-11-86 செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை இல்லம்,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

திருமதி பு: சிவனடியான்

C 5846

## லண்டனில் மரணமடைந்த மூவர்விபரம்

லண்டன், நவ 16

கிழக்கு லண்டன் நகரில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற குண்டுவீச்சில்பலியான 3 தமிழ் இளைஞர்களின் பெயர் விபரம்:

ஞானகரன் ஆதிமூர்த்தி (வயது 25) லண்டன் பொருளாதாரக் கல்லூரியில் கணக்கியல் மாணவன்.

ஞானகரனின் சகோதரன் கருணாகரன் (23வயது) ஹக்னே கல்லூரியில் கம்பியூட்டர்தொழில்நுட்பத்துறை மாணவன்.

நிர்மலன் செல்வநாயகம் (22 வயது) லண்டன் பொருளாதாரக் கல்லூரியில் கணக்கியற்துறை மாணவன். (ஊ)

# மரண அறிவித்தல்

### A. J. அன்ரனி

பாண்டியந்தாழ்வு A. J. அன்ரனி (ஓய்வுபெற்ற மேல் நீதின்ற லிகிதர், யாழ்ப்பாணம்) 16-11-86ல் காலமானார் இவர் அன்னம்மா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும், செல்வின் (பிரான்ஸ்), கிளட்வின் (பிரான்ஸ்), ஜெஸ்லின் (லண்டன்), ஐரின் (புனித வளனார் அச்சகம்), கொட்வின் (பிரான்ஸ்), மேவின், மேவின் (புனித பத்திரிசியார் கல்லூரி), ஸ்பெல்வின் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத தந்தையும், கிறிஷாந்தஸ் இக்னேசியஸ் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், அன்றூ வினோத்தின் அன்புப் பாட்டனாருமாவார். இவரின் நல்லடக்கம்பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: திருமதி அன்னம்மா.

(C-5848)

### திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை

சுழிபரம் கம்பனை கணபதிப்பிள்ளை வள்ளியம்மை காலமானார். இவர் முன்னாள் கம்பனை முருகேசு கணபதிப்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்ற நடராசா (மூளாய் ஆஸ்பத்திரி), சுப்பிரமணியம் (கட்டடப் பகுதி மன்னார்) திருமதி இளையதம்பியின் தாயாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் திருவடிநிலை மயானத்தில் இன்று நடைபெறும். தந்தி, தொலைபேசி வசதி இன்மையால் இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

க. சுப்பிரமணியம்

(தகவல்: International Communication Complex, Manipay). [A 3112]

### தங்கராசா தவமணி

செல்வி தங்கராசா தவமணி காலமாகிவிட்டார். இவர் திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த தங்கராசா தம்பதிகளின் அன்பு மகளும், முத்துக்குமாரசாமி (பிரான்ஸ்), தர்மராசா, ஜெகன், ஆனந்தன், தனேஸ்வரி, இந்திராதேவி, பத்மினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம், சிவானந்தன், கமலாதேவி ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்கு 17-11-86 பகல் 2 மணிக்கு அன்னாரின் இலலத்துல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்: தர்மராசா (தருமு) சிவகாமி ராணிஸ்போட்.

[C-5849]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O; Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126